**சுருக்கம்**

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – நகராட்சி நிர்வாக இயக்ககம் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரியும் பேரூராட்சித் துறையின் நிலையாக்கப்பட்ட பணியாளர்கள் – "தன்விருப்பம்" அடிப்படையில் பேரூராட்சிகள் துறைக்கு திரும்ப அனுப்புதல் – காலக்கெடு நிர்ணயித்து – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை**

அரசாணை (நிலை) எண். **95** நாள்: **21.05.2010**

**மீண்டும் படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண். 118 ந.நி.(ம)கு.வ.துறை, நாள் 21.08.2007.
2. அரசாணை (நிலை) எண்.182 ந.நி.(ம)கு.வ.துறை, நாள் 06.10.2009.
3. அரசு கடித எண். 31431/பேரூ.1/2009–5, நாள்: 30.12.2009.

**மேலும் படிக்கவும்:**

4. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.74948 / 2006 / எஸ்4, நாள் 25.02.2010 மற்றும் 23.03.2010.

****

**ஆணை:**

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மூன்றாம் நிலை நகராட்சிகள் தோற்றுவிக்கப்பட்டு, பேரூராட்சிகளில் பணிபுரிந்து பின்னர் மூன்றாம் நிலை நகராட்சிகளில் தொடர்ந்து பணிபுரிந்துவரும் அரசு நிலையாக்கப்பட்ட மற்றும் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களின் பணி குறித்து அரசாணைகள் வெளியிடப்பட்டன. இதனை எதிர்த்து சிலர் நீதிமன்ற வழக்கு தொடுத்து தடையாணை பெற்று, பின்னர் அவைகளை திரும்ப பெற்றுக் கொண்டனர். இது குறித்து திருத்திய அரசாணைகள் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணையினை செயல்படுத்த சில தெளிவுரைகள் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் வழங்கப்பட்டன.

2. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், அரசாணை எண்.182 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.10.2009–ன்படியும் மற்றும் அரசு கடிதம் எண்.31431/பேரூ.1/2009–5, நாள்:30.12.2009–ல் வழங்கியுள்ள அறிவுரைகளின் படியும் மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்தில் இருந்து நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வரும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்களிடம் நகராட்சித்துறை / பேரூராட்சித்துறையில் பணிபுரிய விருப்பம் தெரிவிக்கும் "தன் விருப்பத்தினை" (option) உரிய படிவத்தில் அனைத்து மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரிந்து வரும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்களிடமிருந்தும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் பணிபுரிந்து வரும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்களிடமிருந்தும் பெற்று பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைத்தார். நகராட்சி நிர்வாகத்தின் கீழ் தற்போது இயங்கிவரும் 49 மூன்றாம்நிலை நகராட்சிகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (மூன்றாம் நிலை நகராட்சிகள் அலகில்) ஆகியவற்றில்

பணிபுரிந்து வரும் அரசு நிலையாக்கப்பட்ட 217 பணியாளர்களில் 206 பணியாளர்கள் பேரூராட்சிகள் துறைக்கு திரும்பச் செல்ல "தன்விருப்பம்" அளித்துள்ளனர். நகராட்சித் துறையில் 11 பணியாளர்கள் மட்டுமே தொடர்ந்து பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், பேரூராட்சித்துறையில் தொடர்ந்து பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ள 206 பணியாளர்களை ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் பேரூராட்சித் துறைக்கு மாற்றம் செய்தால் நகராட்சித் துறையின் கீழ் தற்போது செயல்பட்டுவரும் 49 மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணியாளர்கள் இல்லாத நிலை ஏற்பட்டு நிர்வாக நலனிற்கு குந்தகம் ஏற்படும் சூழ்நிலை உருவாகும் என்பதால் தற்போது மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்தில் இருந்து நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் பணி அமர்த்தப்பட்டு பணிபுரிந்துவரும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்களில் 206 பணியாளர்களை ஒட்டு மொத்தமாக ஒரே நேரத்தில் பேரூராட்சித்துறைக்கு மாற்றம் செய்யாமல், நிர்வாக நலன் கருதி படிப்படியாக (Phased Manner) மாற்றம் செய்யலாம் என்றும் மேலும், தற்போது மூன்றாம் நிலை நகராட்சிகளில் ஏற்கனவே காலியாக உள்ள அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்கள், பேரூராட்சித்துறை பணியாளர்களை திரும்ப பேரூராட்சித்துறைக்கு அனுப்புவதால் ஏற்படும் காலிப்பணியிடங்கள் ஆகியவைகளை நிரப்ப ஏற்படும் காலக்கெடு குறித்து பேரூராட்சிகளின் இயக்குநருடன் கலந்தபின் அரசுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் பேரூராட்சிகளின் இயக்குநருடன் கலந்துபேசி பணியாளர்களை மூன்றாம் நிலை நகராட்சிகளிலிருந்து விடுவிப்பது தொடர்பாக அனுப்பியுள்ள கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்ததில் தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மற்றும் 3–ம் நிலை நகராட்சிகளில் பணிபுரிந்துவரும் அரசு நிலையாக்கப்பட்ட 217 பணியாளர்களில் 206 பணியாளர்கள் பேரூராட்சிகள் துறைக்கு திரும்ப தன்விருப்பம் (option) அளித்துள்ளதால் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சி நிர்வாகத்திற்கு குந்தகம் ஏற்படாத வண்ணம் கீழ்க்கண்ட காலக்கெடுவிற்குள் படிப்படியாக அவர்களை (Phased Manner) பேரூராட்சிகள் துறைக்கு திரும்ப அனுப்ப நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

| | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை | | காலக்கெடு |
|---|---|---|---|---|
| (1) | செயல் அலுவலர் | 30 | – | ஒரு வருட காலம் |
| (2) | தலைமை எழுத்தர் / உதவியாளர் | 19 | – | 4 மாதங்கள் |
| (3) | இளநிலை உதவியாளர் | 84 | – | 8 மாதங்கள் |
| (4) | வரித்தண்டலர் | 54 | – | 8 மாதங்கள் |
| (5) | சுகாதார ஆய்வாளர் | 13 | – | 2 மாதங்கள் |
| (6) | சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 | – | |
| (7) | தட்டச்சர் | 2 | – | 8 மாதங்கள் |
| (8) | பதிவறை எழுத்தர் | 1 | – | 4 மாதங்கள் |
| (9) | அலுவலக உதவியாளர் | 1 | – | 4 மாதங்கள் |
| (10) | இளநிலை பொறியாளர் | 1 | – | 4 மாதங்கள் |
| | **மொத்தம்** | **206** | | |

**4.** இவ்வாறு மேலே பத்தி **3–**ல் கண்டவாறு நடவடிக்கை எடுத்த பின்னர், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்ககம் (மூன்றாம் நிலை நகராட்சி அலகு) ஆகியவற்றிலேயே தொடர்ந்து பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ள பேரூராட்சிகள் துறை பணியாளர்களின் மீள்உரிமையை (Lien) உடன் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

**5.** இது குறித்து ஒரு மாதாந்திர அறிக்கையையும் அரசுக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன்மார்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்:–**
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை –108.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்
அனைத்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்.
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை –108
மாநில தலைமை கணக்காயர், சென்னை 18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், (வடக்கு),
சென்னை 600 001.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், (கிழக்கு),
சென்னை 600 005.
**நகல்:–**
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை –9.
முதன்மைச் செயலரின் தனிச்செயலர், நகராட்சி நிர்வாகம்
மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நிதித்துறை, சென்னை –9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்
அனைத்து பிரிவுகள், சென்னை–9.
இ.கோ./உ.ந.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது.)

பிரிவு அலுவலர்.